# ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் **345** தலைப்பு :தெய்வீக அருள்"

## நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் உள்புறமாக தேடுவது என்றபுத்தகத்தின் பக்கம் *63-68*லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:தெய்வத்தின் அருள் என்பதற்கும் கடவுளின் ஆசீர்வாதம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன.

பதில் அனில்குமார் சார்: நாம் பொதுவாக ஸ்வாமியிடம் ஸ்வாமி என் பிறந்த நாளுக்கு ஆசீர்வதியுங்கள்,திருமண
நாளுக்கு ஆசீர்வதியுங்கள்,என் வியாபாரத்தை ஆசீர்வதியுங்கள் என்றெல்லாம் கேட்கின்றோம்.கடவுளின் ஆசீர்வாதம் நமக்கு தேவை என்ற உணர்வு வரும் போது நாமே வலிய சென்று நம்மை ஆசீர்வதிக்குமாறு ஸ்வாமியை வேண்டுகிறோம்
அவ்வாறு நாமே வேண்டி பெறுவதே கடவுளின் ஆசீர்வாதமாகும்
ஆனால் கடவுளின் அருள் என்பது கேட்காமல் தானே கிடைப்பதாகும்.அது கடவுளின் அளவற்ற கருணையினால் நமக்கு கிடைக்கின்றது.கடவுளின் அருள் என்பது சூரியனின் ஒளியை போல் அனைவருக்கும் பொதுவானதாகும்.அது எப்போதும் நிரந்தரமாக இருப்பதாகும்.அது தேடி கண்டு பிடிக்க பட வேண்டும் என்ற அவசியமில்லாதது.

அடுத்த கேள்வி:
தெய்வத்தின் ஆசீர்வாதம் மற்றும் கடவுளின் கருணை இவை எப்போதும் இருக்க கூடியதா அல்லது சிறிது காலம் சென்றதும் இல்லாமல் போய் விடுமா.

பதில்: அனில்குமார் சார்:
நான் பகவான் பாபாவின் அறிவுரைகளை வாழ்க்கையில் பின்பற்றி நடக்க வில்லை என்றால் அவருடைய ஆசீர்வாதத்திற்கு நான் பாத்திரமாக முடியாது.ஆனால் அனைவரைக்கும் பொதுவாக இருக்கின்ற பகவான் பாபாவின் கருணை என்கும் கிடைக்க முடியும்
தந்தையின் அறிவுரை படி மகன் நடக்க வில்லை என்றால் தந்தை அவனுக்கு செலவுக்கு பணம் தராமல் போகலாம்.
ஆனால் அவருக்கு மகன் மேல் உள்ள அன்பு குறையாது.
ஒரு முறை ஒரு பெரிய தன்வந்தர் ஸ்வாமியை தரிசிப்பதற்காக வந்திருந்தார்.நான் அவரிடம் சார் எதற்காக நீங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள் என கேட்டேன்.
அவர் சொன்னார்

நான் இரண்டாவது தாரமாக ஒரு பெண்ணை மணக்க இருக்கிறேன்.
முதல் மனைவி முழுவதுமாக ஆன்மீகத்தின் பக்கம் திரும்பி விட்டதால் வீட்டை கவனிக்க ஆள் இல்லை.என்னுடைய இரண்டாவது திருமணத்திற்கு ஸ்வாமியிடம் ஆசீர்வாதம் வாங்க வந்தேன் என்றார்.நான் சொன்னேன் சார் ஸ்வாமி இதற்கு நிச்சயம் ஆசீர்வதிக்க மாட்டார்.ஒவ்வொருவரையும் உலகியலை விட்டு ஆன்மீக மார்கத்துக்கு வாருங்கள் என ஸ்வாமி அறை கூவி அழைக்கிறார்.ஒரு வேளை நீங்கள் ஸ்வாமியிடம் ஸ்வாமி என் மனைவி முழுவதுமாக ஆன்மீகத்தின் பக்கம் திரும்பி விட்டதால் நானும் ஆன்மீக வாழ்க்கைக்கையில் ஈடுபட விரும்புகிறேன் என கூறினால் ஸ்வாமி உங்களை ஆசீர்வதிப்பார்.ஆனால்
நீங்கள் உலகியல் வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட மறுமணம் செய்து கொள்வதாக சொன்னால் ஸ்வாமி உங்களை ஆசீர்வதிக்கவே மாட்டார்.நீங்கள் ஸ்வாமியை தரிசிக்காமல் இப்படியே ஊருக்கு திரும்பி செல்லுங்கள் என்றேன்.

அடுத்த கேள்வி:
கடவுளின் அருளை பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும்.

பதில் அனில்குமார் சார்:
இங்கே சூரிய ஒளி வீசுகிறது.
நீங்கள் சூரியனுக்கு எதிர் திசையில் நடந்தால் உங்கள் நிழல் உங்களுக்கு முன்பாக விழும்.
நீங்கள் சூரியன் இருக்கும் திசையை நோக்கி நடந்தால் உங்கள் நிழல் உங்களுக்கு பின்னால் தான் விழும்.
நீங்கள் இறைவனை நோக்கி நடந்தால் அதாவது எப்போதும் இறை சிந்தனையுடன் இருந்தால் இறைவனின் அருள் உங்களுக்கு கிட்டி விடும்.ஆனால் நீங்கள் இறைவனை விட்டு விலகி உலகியல் இன்பங்களில் ஆழ்ந்து கிடந்தீர்களானால் இறைவன் அருளை பெற வேண்டும் என்ற எண்ணமே உங்களுக்கு தோன்றாது.
அதுவே மாயா அறியாமை அஞ்ஞானமாகும்.

அடுத்த கேள்வி:
நம் ஸ்வாமி யின் அருளை பெறுவது எவ்வாறு.

பதில் அனில்குமார் சார்:
ஸ்வாமியின் அருள் என்பது கடைக்கு சென்று வாங்குகின்ற ஒரு பொருள் அல்ல.ஸ்வாமி யின் அருளை நாம் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்ற அவசியமில்லை எப்போதும் எங்கும் அது நிறைந்திருக்கிறது.
நீங்கள் தண்ணீர் குடிக்க வேண்டும் என்றால் குழாயை திறந்து விட்டு இரு கைகளையும் குவித்து அதில் நீர் பிடித்து அருந்த வேண்டும்

அல்லவா.மாறாக கைகளை கீழ் நோக்கி தொங்க போட்டு கொண்டால் அதில் நீரை எப்படி பிடிக்க முடியும்.
கடவுளின் அருள் என்பது எப்போதும் எல்லாருக்கும் பொதுவானதாக இருந்து கொண்டே தான் இருக்கிறது.
ஆனால் உங்கள் மனதை எப்போதும் வெளிபுறமாகவே செல்ல நீங்கள் தொடர்ந்து அனுதித்துக் கொண்டேயிருந்தால் உங்களால் கடவுளின் அருளை கருணையை அனுபவிக்க முடியாமலேயே போய்விடும்.
ஸ்வாமி உங்கள் அருளை பெறுவதற்கு என் மனம் எப்போதும் உங்கள் நினைவுகளிலேயே லயித்து இருக்கட்டும்.
மேலும் எங்கள் மனம் நேர் மறை எண்ணங்களைமட்டுமே கொண்டதாக இருக்கட்டும் என்ற முறையே சரியானதாகும்.

அனைவரும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம் ஜெய் சாயிராம்